(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2022 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் மூன்றாவது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஈ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு திரு. நா. இராமகிருஷ்ணன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. நா. இராமகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2022 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் மூன்றாவது அறிக்கையை குழுவின் சார்பாக மனமுவந்து பேரவைக்கு அளிக்கின்றேன்.*

முற்பகல் 11–55

5. மானியக் கோரிக்கைகள், 2022–2023, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2022–2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*